## ஆகஸ்ட்– 21 – செவ்வாய்

**புனித 10ம பத்திநாதர் - திருத்தந்தை**
**“செல்வர் விண்ணரசில் புகுவது கடினம்“-மத்தேயு19:23**

### முதல் வாசகம் : ஏசேக்கியல்28 : 1 – 10

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. மானிடா! தீர் நகரின் மன்னனுக்குச் சொல். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே உன் இதயத்தின் செருக்கில், ”நானே கடவுள் நான் கடல் நடுவே கடவுளின் அரியணையில் வீற்றிருக்கிறேன்” என்று சொல்கின்றாய், ஆனால் நீ கடவுளைப்போல் அறிவாளியாக இருப்பதாக எண்ணிடினும், நீ கடவுளல்ல மனிதனே!தானியேலை விட நீ அறிவாளிதான்! மறைபொருள் எதுவும் உனக்கு மறைவாயில்லை!உன்ஞானத்தாலும் அறிவாலும் உனக்குச் செல்வம் சேர்த்தாய். உன்கருவூலத்தில் பொன்னையும் வெள்ளியையும் குவித்தாய்.உன்வாணிபத் திறமையால் உன் செல்வத்தைப் பெருக்கினாய் உன்செல்வத்தினாலோ உன் இதயம் செருக்குற்றது. ஆகவே, தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் கடவுளைப்போல் அறிவாளி என உன்னைக் கருதிக்கொள்வதால்,மக்களினங்களில் மிகவும் கொடியோரான அன்னியரை உனக்கெதிராய் எழும்பச் செய்வேன் அவர்கள் உன் அழகுக்கும் ஞானத்திற்கும் எதிராக உருவிய வாளுடன் வருவர் உன் பெருமையைக் குலைப்பர். படுகுழியில் தள்ளுவர் உன்னை் கடல் நடுவே மூழ்கிச் சாவோரெனச் சாவாய் நீயே!அப்போது உன்னைக் கொல்வோரின் நடுவில் ”நானே கடவுள்” என்று சொல்வாயே? உன்னைக் குத்திக் கிழிப்போரின் கையில் நீ கடவுளாக அல்ல, மனிதனாகவே இருப்பாய்.விருத்தசேதனம் செய்யப் படாதவனைப்போல் அன்னியர் கையால் நீ சாவாய். நானே உரைத்தேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

**பதில்பாடல் :** கொல்பவரும் நானே. உயிர் அளிப்பவரும் நானே.

### நற்செய்தி : மத்தேயு 19 : 23 – 30

அக்காலத்தில் இயேசு தம் சீடரிடம், ”செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் எனநான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்.மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன் செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது” என்றார். சீடர்கள் இதைக்கேட்டு, ”அப்படியானால் யார்தாம் மீட்புப் பெறமுடியும்?” என்றுகூறி மிகவும் வியப்படைந்தார்கள். இயேசு அவர்களைக் கூர்ந்துநோக்கி, ”மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்” என்றார். அதன்பின்பு பேதுரு இயேசுவைப் பார்த்து, ”நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே. எங்களுக்கு என்னகிடைக்கும்?” என்றுகேட்டார்.அதற்கு இயேசு, ”புதுப்படைப்பின் நாளில் மானிடமகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது என்னைப் பின்பற்றிய நீங்களும் இஸ்ரயேல் மக்களின் பன்னிரு குலத்தவர்க்கும் நடுவர்களாய்ப் பன்னிரு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.மேலும் என்பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நிலபுலன் களையோ விட்டுவிட்ட எவரும் நூறுமடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப்பேறாக அடைவர்.ஆனால் முதன்மையானோர் பலர் கடைசியாவர். கடைசியானோர் பலர் முதன்மையாவர்” என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** “ஏழையாகப் பிறந்தேன், ஏழையாக வாழ்ந்தேன், ஏழையாகவே இறப்பேன்” என்று வாழ்ந்து காட்டிய 20ம் நூற்றாண்டின் மிகச்சிறந்த திருத்தந்தையரில் ஒருவரான புனித 10ம் பத்திநாதர் திருத்தந்தையை இன்று நினைவுகூருகிறோம். இன்றைய புனிதர், சிறு பருவத்தினரை அதிக மதிகமாக திவ்விய நற்கருணை பெறுவதற்கு ஊக்குமூட்டிய முன்னோடியாகத் திகழ்பவர். இவ்வுலகில் அனைத்துமே நுகர்வுக்கலாச்சாரமாகி விஞ்ஞானம் வேகமாக வளரும் சூழலில் “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது“ (மத்தேயு19:24) எனப்படும் அழியா நற்செய்தி எம்மை ஆழமாகச் சிந்திக்க அழைக்கிறது. இவ்வுலகில் அறிவாற்றலும், வாணிபத்திறமையும், செல்வமும் வளர்ந்து செருக்கும், தீமைகளும் பெருகுகின்றன. மனிதன் இறைவனை விட்டுப்பிரிந்து வாழ்வதற்கான சோதனைகளும் பெருகிவருகின்றன. ஆண்டவர் இயேசு தமது அழியாத வார்தைகளால் நமக்கு விடுக்கும் எச்சரிக்கையை ஏற்றுக்கொண்டு, இறைவனைவிட்டுப் பிரிந்து நாம் எதுவும் செய்ய இயலாது என்பதை உணர்ந்து நம்மையே தாழ்த்திக்கொள்ள இன்றைய நற்செய்தி எமக்கு அழைப்பு விடுக்கின்றது. ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றும் ஆவலோடு வந்த செல்வந்த இளைஞனுக்கு சொத்தை விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு இயேசுவைப் பின்செல்ல துணிவு இருக்கவில்லை. அந்த உரையாடலின் பின்னணியில் ஆண்டவர் இயேசு “செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்“ என்கின்றார் (மத்தேயு19:23). செல்வம் இருந்தால் இறையாட்சியில் புகமுடியாது என்பதற்கு பதிலாக, மிக ஆழமான கருத்தை ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதென எடுத்துச்சொல்லி ஆண்டவர் இயேசு விளக்கமளிக்கின்றார். எமது அன்றாட வாழ்விற்குப் பணம் தேவையாயினும் தேவைக்கு மிஞ்சியதை அளவிற்கு அதிகமாக சேகரித்து வைத்திட முற்படும்போது எமது மனங்களிலே அகந்தை, ஆணவம், வறட்டுக் கௌரவம், வேறுபாடு, வித்தியாசம் போன்றவை குடியேறி மற்றவர்களிடம் இருந்து பிரித்து மனிதத்திற்கு எதிரான செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. மிகச்சிறிய ஊசியின் காதில் ஒட்டகம் என்ற உயர்ந்த மிருகம் எவ்வாறு நுழைய முடியாதோ, அதைப் போலவே, தங்களது பணத்திமிரால் சமூகத்தில் உயர்ந்தவர்கள் எனப்படும் மனிதர்களும் விண்ணரசில் நுழைந்திடவே முடியாது என்று தெளிவுற விளக்குகின்றார். எம்மிடம் இருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்து இல்லாதவர்கள் என்ற நிலையை ஒழித்து இறையாட்சியைக் கட்டியெழுப்புவோம்.